# தலைநகரில் 3 உணவகங்கள்
# மூடப்பட்டன




கோலாலம்பூர், பிப். 21-
தலைநகரைச் சுற்றியுள்ள உணவகங்களில் மேற்கொள்ளப்பட்ட சோதனையின் வழி கோலாலம்பூர் மாநகர் மன்றம் 3 கடைகளை மூடுமாறு உத்தரவிட்ட வேளையில் 65 கடைகளுக்கு அபராதத்தை யும் விதித்துள்ளது.

தலைநகரிலுள்ள ஜாலான் கெந்திங் கிளாங், ஜாலான் மக்தாப், தாமான் மஸ்தியாரா, கேஎல் ஈஸ்ட் மால், தாமான் புக்கிட் அங்கரிக், தாமான் ரிம்புனான் ராயா ஆகிய இடங்களில் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின் வழி கோலாலம்பூர் மாநகர் மன்றம் இந்நடவடிக்கையை எடுத்துள்ளதாக அது நேற்று வெளியிட்ட ஓர் அறிக்கையில் கூறியது.

இச்சோதனையின்போது மிகவும் அசுத்தமான நிலையில் காணப்பட்ட 3 உணவகங்களை 2016ஆம் ஆண்டு ஊராட்சி உணவு, லைசென்ஸ் சட்டப் பிரிவின் 28(1) கீழ் மூடுமாறு உத்தரவிடப்பட்டதாகவும் அந்த அறிக்கை கூறியது.

அதேவேளையில் மேற்குறிப்பிட்ட உணவகங்கள் பல்வேறு குற்றங்களைப் புரிந்ததாக அவர்களுக்கு பல்வேறு வகையிலான அபராதங்கள் விதிக்கப்பட்டதாகவும் அது கூறியது.

நாடுமுழுவதும் உள்ள குறிப்பாக தலைநகரைச் சுற்றியுள்ள உணவகங்கள் சுத்தமாக இருப்பதை உறுதிப்படுத்த இதுபோன்ற சோதனை நடவடிக்கைகளை கோலாலம்பூர் மாநகர் மன்றம் தொடரும் என்றும் அந்த அறிக்கை கூறியது.